# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
# DEPOSITIONS OF WITNESSES
# (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
# DEPOSITIONS OF WITNESSES P.W. 4(L.W.5)
# SC.NO.75/2018

| | | |
|---|---|---|
| Name | : | Thiru.Sivaji |
| Father Name | : | |
| Occupation | : | SSI,Highways Department Patrol, Ambur |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.09.2025

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம்: 01.05 p.m**

**எதிரிகள் 1 மற்றும் 2 தரப்பில் குறுக்கு விசாரணை–**

இந்த சம்பவம் 21.03.2006 அன்று நடந்தது. என்னை யார் அந்த இடத்திற்கு அழைத்து சென்றார்கள் என்றால் RSI(Reserve SI)சீனிவாசன் தலைமையில் சீனிவாசன், குமார், நான், குகன், அந்தோணி, ராஜாமூர்த்தி, சுரேஷ், மற்றவர்கள் பெயர் நினைவில்லை. 15.30 மணிக்கு ஆயுதப்படையிலிருந்து வேலூர் DSP அலுவலகத்திற்கு சென்று அங்கு வேலூர் கிராமிய உதவி ஆய்வாளர் மற்றும் விரிஞ்சிபுர காவல் உதவி ஆய்வாளருடன் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் உதவி ஆய்வாளர் அவர்களுடன் 10 பேரும் விரிஞ்சிபுர காவல் நிலையம் 16.45 மணிக்கு சென்றோம். விரிஞ்சிபுர காவல் நிலையத்தில் நாங்கள் சுமார் 1 மணி நேரம் இருந்தோம். பிறகு காவல் துணை கண்காணிப்பாளர் எங்களுக்கு அறிவுரை வழங்கினார். பின்னர் சிவநாதபுரம் கையிலாய மலை திப்பையிடம் சென்றோம். நாங்கள் TN 23 G 039 என்ற வாகனத்தில் சென்றோம். காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் உதவி ஆய்வாளர் அவர்கள் காவல் துணை கண்காணிப்பாளர் வாகனத்தில் சென்றார்கள். திப்பையிடம் சென்றபோது நேரம் 18.00 மணி இருக்கும். நாங்கள் திப்பைக்கு சென்றபோது அங்கு ஆள் நடமாட்டம் இருந்தது. சுமார் 2, 3 நபர்கள்

இருந்தார்கள். நான் அந்த 2, 3 நபர்களை சுமார் 50 அடி தூரத்திலிருந்து பார்த்தேன். எங்களை பார்த்தவுடன் அந்த நபர்கள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். அந்த பகுதி காட்டு பகுதி. வாகனம் நேரடியாக அந்த இடத்திற்கு போகாது என்றாலும் சுமார் 2 கி.மீ தூரத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு தான் நாங்கள் சென்றோம். அனைவரும் 2 கி.மீ தூரத்தை சுமார் அரை மணி நேரத்தில் நடந்து சென்றோம்.

அங்கு நாட்டு துப்பாக்கி வைத்து கொண்டு யாரும் இல்லை என்றால் சரியல்ல, இருந்தார்கள். அந்த நாட்டு துப்பாக்கி சுமார் 4 அடி இருக்கும். 2 துப்பாக்கிகளை பார்த்தேன். அந்த 2 துப்பாக்கியும் நாட்டு துப்பாக்கிகள் தான். இரண்டு துப்பாக்கிகளும் ஒரே அளவு கொண்டதுதான். ஒரு துப்பாக்கி நீளமாகவும் ஒரு துப்பாக்கி கொஞ்சம் உயரம் குறைவாகவும் இருந்தது. அந்த துப்பாக்கியை நாங்கள் எடுத்து வந்து காவல் துணை கண்காணிப்பாளரிடம் கொடுத்தோம். அந்த இடத்தில் வேறு என்ன பார்த்தோம் என்றால் 2 லாரி டியுப்களில் 100 லிட்டர் நாட்டு சாராயம் மற்றும் சாராய பாக்கெட்டுகள், பணம் ரூ.150 இருந்தது. சாராய பாக்கெட்டுகள் தோராயமாக 25 பாக்கெட்டு சாராயம் இருந்தது. அந்த பணம் எந்த வகையான தாள் என்றால் சரியாக நினைவில்லை. அது ரூ.10, 20 தாள்களா என்று தெரியாது.

அந்த சாராயடியுப்கையும் 25 சாராய பாக்கெட்டையும் மற்றும் பணம் ரூ.150 ஆகியவற்றை நாங்கள் எடுத்து வந்தோம். காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையில் அவருடைய வாகனத்தில் வைத்து எடுத்து கொண்டு வந்துவிட்டோம். அந்த சாராய பாக்கெட்டுகள் மற்றும் பணமும் யாருக்கு உரிமையானது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் தனித்தனியாக சொல்ல முடியாது ஆனால் எதிரிகளுக்கு சம்மந்தமானது. எதிரிகளுக்கு சம்மந்தமானதாக இருக்கலாம் என்று தான் சொல்கிறீர்கள் என்றால் சம்மந்தப்பட்டது.

அதன் பின்னர் காயம் பட்ட அந்தோணி ராஜா, சீனிவாசன்(RSI), எதிரி மணி

என்பவர்களை அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்காக சேர்த்தோம். நாட்டு துப்பாக்கி யாருடையது என்று உறுதியாக சொல்ல முடியாது என்றால் எதிரிகளுடையது, ஒரு துப்பாக்கி சடையன் என்பவருடையது. ஒரு துப்பாக்கி சடையன் கையில் இருந்தது. மணி கையில் ஒரு துப்பாக்கி இருந்தது. அங்கு ஆடு மேய்த்து கொண்டிருந்த எதிரியை காவல் துணை கண்காணிப்பாளர் சுட்டுவிட்டார் என்றாலும் அதை மறைப்பதற்காகவும் அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காகவும் எதிரிகள் சாராயம் காய்ச்சி கொண்டு இருந்ததாக பொய் வழக்கு போட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மருத்துவமனைக்கு சென்று சேர்த்த பிறகு என்னை யாரும் விசாரிக்கவில்லை என்றால் விசாரித்தார்கள். DCRB DSP அடுக்கம்பாறை மருத்துவமனையில் அன்றைய தினமே சுமார் இரவு 08.00 மணிக்கு விசாரித்தார்கள். அதன் பிறகு இந்த வழக்கு சம்மந்தமாக என்னை யாரும் விசாரிக்கவில்லை. என் உயர் அதிகார் கேட்டு கொண்டதன் பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் 1 மற்றும் 2 தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்படுகிறது. கூடுதல் குறுக்கு விசாரணை இல்லை.

**விசாரணை முடிந்த நேரம்: 01.25 p.m**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2025.09.24 19:18:10 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,

வேலூர்